RESEARCH ARTICLE

DOI: 10.34256/irjt22s854

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# குருகுல முறையில் பார்வையற்றோர்கள் செவ்வியலிசை கற்கும் முறைகள் ஒரு கண்ணோட்டம்

லூ. ஜனார்த்தனன் [அ, *]

[அ] தமிழ்த்துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்-608002, தமிழ்நாடு, இந்தியா.

# An Overview of the Methods by which the Visually Impaired Learn Classical Music in the Gurukula System

**L. Janarthanan** [a, *]

[a] Department of Tamil, Annamalai University, Chidambaram-608002, Tamil Nadu, India

* Corresponding Author: janaartist79@gmail.com

Received: 14-04-2021
Revised: 13-06-2022
Accepted: 16-06-2022
Published: 20-08-2022

Check for updates

**ABSTRACT**

The gurukul education system is one in which a student who wants to study the arts first selects a guru and approaches him. The Guru, too, will give some tests to know whether he is really interested in learning and whether he is qualified to do so if he is selected, he will admit him into his gurukul (educational place). He stays with the guru and learns that art, which is the gurukul system of education. In that place, disciplines like duty, decency, and control were taught in addition to the art the student studied. From getting up in the morning and taking a bath after completing the nature calls and yoga practice, he was taught the meaning of "duty" by performing the duties assigned to him, starting with the needs required by the guru. When a student goes to a guru to learn music, he will be taught vocals, string instruments, wind instruments, leather instruments, etc., based on his voice and his skills. Mridangam vidwan Valangaiman Thiyagarajan and veena maestro Srini Maheshwari Venkataraman have said in an interview that the gurukul system is the best way for the visually impaired to learn classical music. In texts like Ratnakaram, it is said that music is an artificial combination of the three songs: instruments and acting. The authors of Tamil literature also call it music, which contains within itself questions, swarams, taalams, ragas, ideas, beautifications, and flavours. If this music is to develop in a way that is not to be questioned among the students, it is necessary to teach music properly. When the visually impaired learn music in the gurukul system, the students can learn clearly by interacting with the students, like parents and relatives, and teaching them the art. In this way, this article explains the usefulness, method, and guidance of learning classical music in a gurukul manner.

**Keywords:** Gurukula System, Education System, Classical Music, Tamil literature

## முன்னுரை

கேட்பதற்கு இனிய நாதமான ஒலியே இசையாகும். குயில் கூவுவது, குழந்தை சிரிப்பது, தாய் தாலாட்டு பாடுவது, உழைப்பவர்கள் உழைக்கும் நேரத்தில் ஆடி, பாடி வேலை செய்வது, இறைவனை வழிப்படுவது, அரசர்களைப் புகழ்வது, அன்பின், எண்ணங்களின் உணர்வை வெளிப்படுத்துவது, மனித வாழ்வு முடிந்த பிறகு சோகங்களை வெளிப்படுத்துவது என அனைத்திலும் இசை இணைந்துள்ளது. இசையை பல வடிவங்களில் மொழிகளின் அடிப்படையிலும், இறை நம்பிக்கையின் வழியிலும், மாநிலங்கள் பிரிவிலும், வேறுபட்டு மாறுபட்டாலும், சப்த ஸ்வரங்களின், சப்த தாளங்களின் வழியில்

தான் இசை அமைந்துள்ளது. அந்த வகையில் தென்மாநிலங்களில் வாழும் மக்கள் செவ்வியலிசை என்று அழைக்கப்படும் கர்நாடக சங்கீதத்தை கையாளுகின்றனர். மாணவர் கள் சந் தேகம்இ ல்லாமல் சரியான முறையில் கற்க வேண்டுமென்றாலும், ஒரு நல்ல இசைக் கலைஞன் சமூகத்தில் உருவாக வேண்டுமென்றாலும், குருகுலக் கல்வி முறை சிறந்தது என்று பல இசை மாமேதைகள் கூறியுள்ளனர்.

மாணவர்கள் மனதில் அன்பும், பயபக்தியும் கொண்டு, ஆர்வத்துடனும், உற்சாகத்துடனும் இசை பயில வேண்டும். தெளிவான, மேன் மையான குரல் வளம் வருவதற் காக குருவின் வழிகாட்டுதலை பின்பற்ற வேண்டும். சுருதி ஞானம் வளர்த்துக் கொள்ள குருவின் ஆலோசனையை பெற வேண்டும். குரல்வளம் குறைந்தவர்கள் இசைக் கருவி பயில அதற்கேற்ற குருமார்களை தேர்வு செய்தல் நல்லது. ஸ்வரஞானம், சுருதிஞானம், தாளஞானம், சாகித்ய ஞானம், மனோதர்மஞானம் ஆகியவைகளை குருகுலக் கல்வி மூலம் எளிமையாகக் கற்றுக் கொள்ளலாம். ஒரு மாணவன் தனியாகக் கற்பதற்கு அவனுடைய மனநிலை, அறிவு, திறன், ஆற்றல் ஆகியவற்றை வளர்த்துக் கொள்ள குருகுலக் கல்வி முறை சிறந்ததாக இருந்தது. கற்பிக்கும் பாடல்களை விளங்கக்கூடிய வகையில் சிறிது சிறிதாகக் கற்றுக் கொடுப்பார்கள். மேலும் அப்பாடல்களை வாத்தியங்களில் வாசித்தும் காட்டுவார்கள். இதன் மூலம் மாணவர்கள் ஆர்வத்தோடு இசைக் கற்றுக் கொள்வார்கள். கதைப்பாடல்கள், மெல்லிசைப் பாடல்கள், நாட்டார்ப் பாடல்கள் போன்றவற்றைக் கற்றுக் கொடுத்து இசையின் ஈடுபாட்டை அதிகப்படுத்துவார்கள். பெயர் பெற்ற இசை வித்வான்களுடைய, இசை வாக்கேயக்காரர்களுடைய வாழ்க்கைச் சரித்திரங்களை, சுவையான அம்சங்களை கதைகளாக் கூறி கலைக் கல்வி வகுப்புகள் நடத்துவார்கள். இதன் மூலம் மாணவர்களும் இசையிலே அந்த நிலைக்கு வரவேண்டும் என்ற உத்வேகத்தை உருவாக்குவார்கள்.

பார்வையற்றவர்கள் குருகுலக் கல்வி முறையில், இசை கற்கும் பொழுது ஒரே பாடங்களை மீண்டும் மீண்டும் நேரடியாக விளக்கம் கேட்டுக் கற்றுக் கொள்ளலாம். குருகுல கல்வி முறையில் பார்வையற்ற மாற்று திறனாளிகள் வாய்ப்பாட்டு, வீணை, வயலின், மிருதங்கம், கடம், கஞ்சிரா, முகர்சிங், புல்லாங்குழல், நாதஸ்வரம், தவில் போன்ற இசைக் கருவிகளில் பல மாமேதைகள், வானொலி நிலைய கலைஞர்களாவும், பேராசிரியர்களாகவும், மேடை கலைஞர்களாகவும், இசையமைப்பாளர்களாகவும் உருவாகி சாதனைபடைத்துள்ளார்கள். பார்வையற்றவர்கள் குருகுல முறையில் செவ்வியலிசை கற்பதன் பயன், நோக்கம், தேவைகள் குறித்து இக்கட்டுரையில் காணலாம்.

## பார்வையற்றோர்கள் குருகுல கல்வியில் அடையும் பயன்கள்

உலகில் உள்ள கலைகளில் இசை என்பது எல்லோருக்கும் பொதுவான கலையாகும். முன்னர் ஒரு காலத்தில் கல்விக்கூடங்கள் இல்லாத நாட்களில் பல ஆண்டுகளாக மக்கள் தென்னக இசையாகிய கர்நாடக இசையை குருகுலவாசமாகக் கற்கும் முறை தான் வழக்கத்திலிருந்தது. இசை போன்ற நுண்கலைகள் இவ்வாறு கற்பதனால் தான் முழுமையடைகின்றது. குருகுலக்கல்வியானது கர்நாடக இசைக்கு இன்றியமையாததொன்றாகக் காணப்படுகின்றது. இதனால் இசையும் மிகச் சிறப்புடன் விளங்கியது. இதனைத் திருமூலர் அவர்கள்,

"தெளிவு குருவின் திருமேனி காண்டல்

தெளிவு குருவின் திருநாமம் செப்பல்

தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்

தெளிவு குரு உரு சிந்தித்தல் தானே"

எனக் குரு பக்தியைப் பற்றிக் குறிப்பிடுகின்றார் (Rathinasabapathy, 2016).

பக்தியுடன் நல்லதொரு குருவைத் தேடிப் பல வருடங்கள் அவரோடு வாழ்ந்து, அவருக்குத் தேவையான பணிவிடைகள் புரிந்து அவர் அவ்வப்போது கற்றுக்கொடுக்கும் பாடங்களை கவனமுடன் கேட்டு, மனனம் செய்து, மனதில் பதியவைத்து அப்படியே திருப்பிப் பாடும் பழக்கம் தான்

குருகுலவாசமாக இசை கற்கும் முறையாகும். முன்னர் இந்தவழியில் ஒருசிலராலும் அவர்களது பரம்பரையைச் சேர்ந்தவர்களாலும் மட்டுமே இசை கற்க முடிந்தது. இதனை

"சீதாவர சங்கீத ஞானமு டாதவ்ராயவல"

என்ற தியாகராஜஸ்வாமிகளின் வார்த்தைகள் மூலம் விளங்கிக்கொள்ளலாம்.

குருகுல முறையில் ஊதியம் தர வேண்டிய தேவையில்லை.

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்

பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே"

என்னும் நன்னிலை இருந்தது (Swaminatha Iyer, 2014).

குருகுலவாசத்தில் உடனிருந்து கற்கும் போது தாய் தந்தையருக்கு நாம் பணிவிடை செய்வது போல் குருவுடன் தங்கியிருந்து இசை கற்கலாம். பார்வையற்றோர்கள் அவ்வாறு பணிவிடைகள் செய்வதற்கு சிரமம். எனவே சில குருமார்கள் அதையெல்லாம் பொருட்படுத்தாமல், சேவை மனப்பான்மையுடன் இசை கற்றுக் கொடுப்பார்கள். ஆழமான அகலமான அறிவும், குருகுலத்தில் பல பாடத்திட்டங்கள் விரிவாக இசை நுட்பங்களைத் தெளிவாகக் கற்க முடிந்தது. குருவுடன் உடனுறைந்திருப்பதால் சந்தேகம் வரும் போதும் உடனடியாகத் தெளிவுபடுத்தக் கூடியதாக உள்ளது. சகல விதமான இசை நுட்பம் நிறைந்த உருப்படிகளைக் கற்றுக் கொடுத்தார்கள். குரு மாணவர் உறவு மிகச் சிறந்தது, வழி வழி வாழ்ந்து வந்தது. குருவுடன் உடன் தங்கியிருப்பதால் உறவினரை விட மிக நெருங்கிய உறவு குரு சிஷ்யருக்கு ஏற்படுகின்றது. குருவுடன் உடனுறைவதால் மாணவர்களுக்கு இசை கற்கும் நேரம் நிறையக் கிடைத்தது. குருவுடனே தங்கியிருந்து நினைத்த நேரம் எல்லாம் கற்க முடிவதாலும், அவரது இசை நிகழ்ச்சிகளுக்கும் அவருடனே செல்வதால் இசை பற்றிச் சிந்திக்க நீண்டநேரம் கிடைக்கிறது. இதனால் பார்வையற்றோர்கள் குருகுல கல்வி முறையில் பல பயனடைந்தனர் (Kirshnan, 1992).

இசை குருமார்கள் எல்லோருக்கும் இசைந்தவராகவும் எல்லோர் மனத்தையும் இசைப்பவராகவும் கலைகளோடு இணைந்தவராகவும் இருப்பார். இசையினைக் கற்பித்தல் ஆற்றலால் மாணவரைத் தம்பால் ஈர்ப்பவராக இருப்பார். தனது திறமையின் அளவை உணர்ந்து பணிவான மனப்பாங்கு உடையவராகவும், எந்தவிதமான கஷ்டத்திலும் தடுமாற்றமில்லாதவராகவும் இருப்பார்கள். இசைஞானமில்லாத மாணவர்கட்கு கற்பிக்க நேரிடினும் பொறுமையை இழக்காது தனது கடமையை ஆற்றுவார்கள். மாணவர்கள் கேட்கும் கேள்விகளுக்குச் சலிக்காமல் விடையளிப்பார்கள். இவ்வாறு குருமார்கள் பல நற்குணங்கள் பெற்றிருந்தாலும், திறமை வாய்ந்தவராக இருந்தாலும் பார்வையற்றவருக்கு இசை கற்றுக் கொடுக்கும் பொழுது, சகிப்புத் தன்மையுடனும், நெருங்கி பழகியும், புரியாத விடயங்களை தொடு உணர்வு மூலம் கற்றுக் கொடுத்து அவர்களின் திறமையை வெளிக்கொண்டு வந்துள்ளனர்.

## பார்வை குறைந்த இசைக் கலைஞர்களின் கருத்து

க. தியாகராஜன் அவர்கள் சிறந்த மிருதங்க மாமேதை. இவர் வலங்கைமான் என்னும் ஊரில் 1966-ஆம் ஆண்டு, எட்டாவது குழந்தையாக, கலியபெருமாள், மாரியம்மாள் தம்பதியருக்கு பிறந்தார். இவர் குடும்பம் மிகவும் வறுமையானது. இவர் பிறவியிலே பார்வையை இழந்தார். பள்ளி படிப்பு 3-ஆம் வகுப்பு வரை படித்தார். பள்ளி படிப்பு ஆர்வத்தை விட இசை மீது மிகுந்த ஆர்வம் கொண்டார். அவருடைய மூத்த அக்காவின் ஆலோசனையின் படி, காரைக்கால் சர்மா அவர்களிடம் மிருதங்கம் பயின்றார். இரண்டு ஆண்டு குருகுல முறையில் இசைக் கல்வி பயின்றார். மிருதங்க ஆசிரியர் சர்மா அவர்களின் ஆலோசனையின் படி திருச்சி தாயுமானவர், மிருதங்க வித்வான் அவர்களிடம் 1979-ஆம் ஆண்டு குருகுல இசைக் கல்வியில் சேர்ந்தார்.

முதலில் இவர் பார்வை குறைந்தவருக்கு குருகுலக் கல்வி முறை சாத்தியமா என்பதை சற்று சிரமமாக எண்ணினார்களாம். பிறகு அவருடைய இசை ஆர்வத்தின் அடிப்படையிலும், சர்மா மிருதங்க ஆசிரியருடைய பரிந்துரையாலும், குருகுல வாசக் கல்வியில் சேர்த்துக் கொண்டார். மிருதங்க வித்வான் திருச்சி தாயுமானவரின் முதல் குருவான இராஜப்பைய்யரிடம் பார்வையற்ற தன்னைப் பற்றி கூறினாராம். அதற்கு இராஜப்பைய்யர் திருச்சி தாயுமானவரிடம் குருவாகிய எனக்கு எதவாது செய்ய நினைத்தால், இந்த பையனை மிருதங்கத் துறையில் சிறப்பாக உருவாக்க வேண்டும் என்று கூறினார்.

பின்பு வலங்கைமான் தியாகராஜன் மிருதங்க வித்வான் அவர்களை, திருச்சி தாயுமானவர் மிருதங்க வித்வான் அவர்கள் குருகுல வாசம் கல்வி முறைக்கு ஒப்புக் கொண்டார். தாயுமானவர் அவர்களின் மனைவி அவர்கள், மாணவர்களை தம் பிள்ளைகள் போல் பாவித்து உணவு சமைத்து பார்த்துக் கொள்வாராம். அவர் நடக்கும் வழியில் எல்லாம் பொருள்கள் இல்லாமல் ஒதுக்கி வைத்து விடுவார்களாம். இதன் மூலம் அவர் தனியாக வீட்டிற்குள் நடந்து பழகுவாராம். குரு தாயுமானவர் அவர்கள் கைகளைத் தொட்டு பிடித்து வாசிப்பதன் முறையை கற்றுக் கொடுப்பாராம். பாடங்களை புரிந்து கொள்வதற்காக ஒரே பாடங்களை பல நேரம் பயிற்சி செய்ய சொல்வாராம்.

வீட்டிற்கு வரும் மகாவித்வான்களோடு பழகும் வாய்ப்பை ஏற்படுத்தி தருவாராம். அகில இந்திய வானொலியின் நிலைய கலைஞரான திருச்சி தாயுமானவன் அவர்கள், தன் பணிக்கு செல்லும் போதும் இவர்களுக்கு பயிற்சி பாடங்கள் கற்றுக் கொடுத்துவிட்டு, பயிற்சி செய்ய சொல்வாராம். மாலை 5 மணிக்கு பணியிலிருந்து வந்த பிறகு, இரவு 10 மணி வரை மாணவர்களுக்கு இசை வகுப்பு கற்றுக் கொடுப்பார். மூன்றே ஆண்டுகளில் வானொலி நிலையத்தில் இளைய பாரத நிகழ்ச்சியில் வாசிக்க வைத்தார். 1984-ஆம் ஆண்டு பி. கிரேடும், 1987-இல் பி. ஹய், 1992-இல் ஏ. கிரேடு, 2011-இல் ஏ.டாப் கிரேடு அகில இந்திய வானொலியில் இசை தகுதி பெற்றார். இவர் 1990 -வரை 11 ஆண்டுகள் குருகுல கல்வித் தேர்ச்சி பெற்று, கச்சேரி வாசிக்கும் முறைகள், நுணுக்கங்கள், வாத்தியம் பராமரிப்பது, பிறரிடம் பழகுவது, என அனைத்து நற்பண்புகளையும் கற்றுக் கொண்டு இசை ஞானத்தையும், தாள ஞானத்தையும் வளர்த்துக் கொண்டார் (Abhayamba, 1997).

பல மாணவர்களோடு இணைந்து பல மணி நேரம் மிருதங்க சாதகம் செய்தார். திருச்சி தாயுமானவன் மிருதங்க வித்வான் வீட்டில் சில மாணவர்களுக்கு இசை கற்றுக் கொடுக்கும் முறையையும் கற்றுக் கொண்டார். அகில இந்திய வானொலி நிலையத்தில் தாள மேடை நிகழ்ச்சியில், குழந்தைகளை ஒன்றிணைத்து, தாள வாத்திய நிகழ்ச்சிகள் செய்வதற்கு வழிகாட்டினார். இவையெல்லாம் குருகுலக் கல்வியில் கிடைத்த மாபெரும் பயனாகும். வறுமை நிலையில் இருந்த எனது குடும்பத்தை மிருதங்கத் துறையின் மூலமாக, கல்லூரி பேராசிரியராக உயர வைத்தது எனது குரு திருச்சி தாயுமானவன் ஐயா என்று மனமகிழ்ச்சியோடு நேர்காணலில் கூறினார். என்னிடத்தில் கல்லூரியில் எத்தனையோ மாணவர்கள் பயின்று சென்றாலும், சில மாணவர்கள் குருகுல வாசக் கல்வி முறையை விரும்புகின்றார்கள். அவ்வகையில் பார்வைக் குறைப்பாடு கொண்ட திருநெல்வேலி கோ. அருள்தாஸ், திருமுருகன், நாகர்கோவில் மகேஷ்குமார், இவர்களெல்லாம் குருகுலமாக இசைக் கல்வி பயின்றார்கள். இராமேஷ்வரம் லட்சுமணன், பரத்வாஜ், இவர்கள் பார்வையுள்ள மாணவர்கள், குருகுலக் கல்வி பயின்றவர்கள்.

## குருகுலக் கல்வியின் புதிய நிலை

01.05.1966-ல் அன்று சென்னையில் பிறந்த மகேஷ்வரி வெங்கட்ராமன் வீணை வித்வான் ஸ்ரீனி ஆவார். இவரை நேர்காணல் கண்டபோது குருகுலக் கல்வி முறையை இன்னிலை குறித்த கருத்துக்கள் கூறினார். அவர் சிறுவயதிலே பார்வை இழந்தார். அவர்களுக்கு வீணை இசைக்கருவி மீது அதிக ஈடுபாடு இருந்ததைக் கண்ட அவர் தந்தை அவர்கள் வீட்டிற்கே குருமார்கள் வந்து கற்றுக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்தார்கள். இவர்களுடைய குருவானவர்கள் இசைத் துறை மாமேதைகளான திருப்பனந்தாழ் சண்முகசுந்தரபிள்ளை அவர்கள், கல்பகம் சுவாமிநாதன் அவர்கள், கமலா அஸ்வத்தமா அவர்கள், ஜெ. வெங்கட்ராமன் அவர்கள் இல்லத்திற்கு வந்து வீணை இசை, வாய்ப்பாட்டு இசை கற்றுக் கொடுத்தார்கள். வீணை வாசிப்பது என்பது வீணை இசைக்கருவியை வாசிப்பதும், கற்பதும் மிகவும்

கடினமானது. குறிப்பாக பார்வையற்றவர்கள் கையாள்வது என்பது மிகவும் கடினமானது. பார்வையற்றோர்களில் வீணை இசைக் கருவியை கற்றுக் கொள்ளும் மாணவர்கள் குறைவு. எனது குருநாதர்கள் அனைவருமே பொறுமையுடனும், பொறுப்புடனும் எனக்கு வழிக்காட்டினார்கள்.

பல சபாக்களில் என்னை வீணை இசை வாசிக்க வைத்தனர். ஒரு நாளைக்கு ஒரே நாளில் 10 மணி நேரம் தொடர்ந்து வீணை இசைப் பயிற்சி செய்துள்ளேன். அனைத்திந்திய வானொலி நிலையத்தில், நிலையக் கலைஞராக பணி கிடைப்பதற்கு அனைத்துக் குருமார்களும் ஆலோசனை தந்து வழிக்காட்டினார்கள். அவர்கள் ஊக்கம் கொடுத்ததினால் பல போட்டிகள் கலந்து, சிறு வயதிலிருந்தே பல பரிசுகள் பெற்றுள்ளேன். வழக்கமாக எந்த மாணவரும் குருநாதர் இல்லத்தில் தங்கி அவருக்கு பணிவிடைகள் செய்து கலையைக் கற்றுக் கொள்வார்கள். எனக்கு பார்வைக் குறை என்பதனால் எங்கள் குருநாதர், எங்கள் வீட்டிற்கு வந்து வீணை இசையைக் கற்றுக் கொடுத்தனர். பார்வையற்றவர்கள் இசைக் கலையை கற்பதற்கு இன்றைய காலச் சூழலில் வீட்டிற்கு வந்து இசைக் கற்றுக் கொடுக்கின்றனர். இதன்மூலம் குருமார்கள் பல பார்வையற்ற இசைக் கலைஞர்களை உருவாக்குகின்றனர் (Chelladurai, 1984).

## குருகுலக் கல்வி முறையில் மாற்றங்கள்

முறையான பாடத்திட்டம் ஒழுங்குற கல்லூரி வந்த பிறகு தான் வரைப்படுத்தினார்கள். இதனை குருமார்கள் வீட்டில் மாணவர்களுக்கு கல்விக் கற்று தரும்போது நினைத்த நாட்களில் நினைத்த நேரத்தில் கடுமையான பாடத்தைக் கற்று தருவார்கள். பெரும்பாலும் இசைப் பாடங்களை மனப்பாடம் செய்துக் கொள்ள வழிக்காட்டுவார்கள். ஒரு குருவிடம் மட்டுமே கற்பதன் மூலம், ஓரே பாணி பின்பற்றப்படும். இசையை மறக்காமல் இருக்கவும், இசையறிஞர்கள் அமைத்த பாடல்களைப் பிழையின்றிக் கற்றுக் கொள்ளவும், எந்த மாற்றமும் செய்யாமல் அவர்களைப் பிறருக்குக் கற்றுக் கொடுக்கவும், இசைக்குறியீடு மிகவும் உதவுகிறது. பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் இன்று இம்முறை பின்பற்றப்படுகின்றது. இக்கால இசை வித்வான்கள், குருமார்கள், அதனை முறையாக கற்றுக் கொண்டு மாணவர்களுக்கு கற்பிக்கின்றனர். பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், இசைப் பள்ளியிலும், வாய்ப்பாட்டு இசை, கருவி இசை, செவ்வியலிசை முறையில் அரசு கற்றுக் கொடுப்பதற்காக பல இடங்களில் வகுப்புகள் தொடங்கியுள்ளார்கள். அந்த வகுப்பு பாடத்திட்டங்கள் மட்டும் பள்ளி, கல்லூரியில் கற்பதன் மூலமாக இசை ஞானம் வளர்ந்துவிடாது.

குறிப்பாக, செவ்வியலிசையை பார்வையற்றோர்கள் பள்ளி, கல்லூரிகளில் பிற மாணவர்களுடன் இணைந்து அனைத்துப் பாடங்களையும் முழுமையாகக் கற்கும் சூழ்நிலை அங்கு இல்லை. அதற்கு காரணம் பார்வையற்றவர்களுக்கு தனிக் கவனம் ஆசிரியர்கள் செலுத்த முடியாது. எனவே குருகுலக் கல்வி மூலம் இல்லத்தில் சென்று பார்வையற்றோர்கள் கற்பது நன்று. அக்காலங்களில் குருக்களுக்கு மாணவர்கள் பணிவிடையைச் செய்து கலைக் கல்விப் பயின்றனர். இக்காலங்களில் அரசே ஊதியங்கள் வழங்குகிறார்கள்.

எனவே பல குருமார்கள் பார்வையற்றவர்களிடம் எந்தவொரு ஊதியம் எதிர்பார்ப்பும் இல்லாமல், பார்வையற்றவர்களுக்கு செவ்வியலிசையைக் கற்று தருகின்றனர். சில இசைக் கருவிகள் மட்டும் இசைப் பள்ளியிலும், கல்லூரியிலும் கற்றுக் கொடுக்கின்றனர். குருகுலக் கல்வி முறையில் செவ்வியல் இசைக் கருவியில் பாரம்பரிய இசைக் கருவிகளான கடம், கஞ்சிரா, முகர்சிங், கெத்து வாத்தியம், ஆகிய இசைக் கருவிகளைக் கற்றுக் கொடுக்கின்றார்கள். பாரம்பரிய செவ்வியலிசைக் கருவிகள் இன்று வரை பாதுகாக்கப்படுவதற்கு குருமார்களின் உண்மையான அற்பணிப்பு, உழைப்பு, உதவி மனப்பாண்மை, எதையும் எதிர்பாராமை, சகிப்புத் தன்மை, இவைகளின் மூலம் மாணவர்களுக்கு கற்றுத் தந்து கலையை வளர்த்து வருகின்றனர் (Pakriswamy Bharathi, 2006).

பார்வைற்றவர்கள் கல்லூரிகளிலும், ஊடகங்களிலும், பள்ளிகளிலும், இணையத்திலும் இசை கற்பதால் முழுநுணுக்கங்களை அறிந்துக் கொள்ள முடிவதில்லை. சிறந்த குருமார்களின் துணையோடு அவர் காட்டும் வழியில் செவ்வியலிசையைக் கற்பதன் மூலம் தெளிவான ஞானத்தோடு இசை கற்றுக்

கொள்கிறார்கள். சில குருமார்கள் பார்வையற்றேர்களை இசைத் துறையில் வளர்வதற்காக தன்னோடு மேடை கச்சேரிகளிலும், இசை உருவாக்கங்களிலும், புதிய கண்டுபிடிப்புகளிலும் இணைத்து செவ்வியலிசையில் வளர்ச்சியடைச் செய்கிறார்கள். வாய்ப்பாட்டு இசையைக் கற்பதற்காக பல ஊடகங்கள் உதவி இருந்தாலும் கருவி இசை கற்பவர்கள் விரல் நுட்பங்களையும், இசைக்கும் முறைகளையும் குருவிடம் கற்றுக் கொள்வது சாலச் சிறந்ததாகும்.

## முடிவுரை

செவ்வியலிசை கற்பதற்கு குருகுலக் கல்வி முறை, பள்ளி கல்வி முறை, ஊடகம் மற்றும் இணையமுறை என பல வழிகள் இருந்தாலும், தெளிவான சங்கீத ஞானத்தோடு சுருதி சுத்தமாக லயத்தில் தெளிவாக கமக்கங்களை புரிந்து கொண்டு சாகித்தியங்களை சுத்தமாகவும் சிறப்பாக கற்றுக் கொள்வதற்கு குருகுல முறையில் கற்பது மிகவும் நன்று என பல ஆய்வாளர்கள், இசை வித்வான்கள் கூறியுள்ளனர். கற்கத் தகுந்த நூல்களைக் குற்றமறக் கற்க வேண்டும். அவ்வாறு கற்ற பிறகு கற்றகல்விக்குத் தக்கவாறு நெறியில் நிற்க வேண்டும். இது கல்விக்கு மட்டுமல்ல, கலைக் கல்விக்கும் பொருந்தும். பார்வையற்றோர்கள் குருமார்களிடம் செவ்வியலிசைக் கற்றுக் கொண்டு, இசைத் துறையில் பல சாதனைகள் படைத்து வருகிறார்கள்.

## References


Abhayamba, (1997) Isaiyiyal – Oor Pudhiya Kannottam Part 1, Manimegalai Press, Chennai, India.

Chelladurai, P.T., (1984) Thennaga Isaiyiyal, Vaikarai Pathippagam, Chennai, India.

Chidambaranar Samy, (2015) Thirukkural thelivurai, Arivu publications, Chennai, India.

Kirshnan, S. A., (1992) Sangeeta Saran, Uma Pathippagam, Chennai, India.

Pakriswamy Bharathi, K.A., (2006) India Isai Karuvoolam, Kuselar Pathippagam, Chennai, India.

Rathinasabapathy, P., (2016) Katralum Karpithalum, Sandha Pathippagam, Chennai, India.

Swaminatha Iyer, U, Ve., (2014) Purananooru Moolam Uraiyum, U, V, SA., Library, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License